3rd May 1957]

சங்கங்கள் வேண்டுமானுல் இயங்கலாம். ஆனுல் சங்கங்களுக்கு அங்கீகாரம் கொடுக்க வேண்டுமென்பதுதான் இதன் நோக்கம். இதனுல் தீமை யிருக்கும் என்று கருதவில்லே. நன்மை தீமைகளே நன்கு ஆராய்ந்து ஆலோசனே செய்த பிறகுதான் கொண்டுவரப்பட்டதென்று கருதுகிறேன். மீண்டும் புனர் பரிசீலனே பண்ணவேண்டியது அவசியமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதெல்லாம் ஆர்குமெண்ட்ஸ். இவைகளெல்லாம் கவனிக்கப்படும்.

SRI A. GOVINDASAMY NAYAGAR : தொழிற் சங்கத்தை தொழிலாளர்களே நடத்த வேண்டுமென்று ஒரு முடிவை அரசாங்கம் வலியுறுத்துமா ? தொழிற்சங்கத்தை பலதரப்பட்ட கட்சிகள் நடத்திச் செல்வதால் அவர்களின் கட்சி நலனுக்கு தொழிலாளர்களே அழைத்துக் செல்லப்படுகிறதைத் தடுப்பதற்கு, ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற் சங்கம்தான் இருக்கவேண்டுமென்று வரும்போது ஒரு குறிப்பிட்ட கட்சிக்கு அந்தத் தொழிற்சங்கம் போகாமல் இருப்பதற்கு இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதில் இரண்டு பிரச்னேகள் இருக்கின்றன. ஒன்று, ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற்சங்கம்தான் இருக்கவேண்டும் என்பது. இரண்டாவதாக, வெளியார்கள் தொழிற் சங்கங்களில் ஈடுபடலாமா என்பது, இரண்டாவதற்கு, இந்திய தொழில் சங்கச் சட்டப்படி வெளியார்கள், எக்ஸிக்யூட்டிவ் கமிட்டியில் பாதிவரை இருக்கலாமென்ற ஒரு ஷரத்திருக்கிறது. அது இருக்கும் வரையில் வெளியார்கள் இருக்கத்தான் செய்வார்கள்.

SRI M. P. SUBRAMANIAM : ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற் சங்கம் தேவையா இல்லேயா என்று பரிசீலனே செய்து கொண்டிருக்கும்போது சம்பந்தப்பட்ட அமைச்சரவர்கள், அந்தக் கருத்திற்கு நான் உடன்படவில்லே யென்று வெளிப்படையாகக் கூறிவிட்டால் அதனுல் அந்த முடிவு பாதிக்கப்படும் என்பது உண்மை அல்லவா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அந்த விதமாக எந்தக் கருத்தையும் இப்பொழுது சொன்னதாகத் தெரியவில்லே. பரிசீலனே செய்யப்படும் என்று சொன்னுல் எல்லாக் கருத்துக்களும் பரிசீலனே செய்யப்படும் என்று பொருள்.

SRI M. KALYANASUNDARAM : புனர் பரிசீலனே செய்து ஒரு முடிவுக்கு வருவதற்கு முன்னதாக சர்க்கார் மீண்டும் இந்த நகல் மசோதாவை லேபர் அட்வைஸரி போர்டுக்கு அனுப்பி, சர்க்காரின் புது யோசனேகளே அனுப்பி அவர்களது ஆலோசனேயைக் கேட்பார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த சப்ளிமெண்டரியைக் கேட்பார்கள் என்று தெரிந்துதான் என்னுடைய முதல் பதிலிலேயே ' லேபர் அட்வைஸரி போர்டிடம் மறுபடியும் கலந்துகொள்வோம் ' என்று சொன்னேன்.

Border dispute

* 2 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state the stage at which the arbitration by Sri Pataskar in settling the border dispute between Andhra and Madras Governmentss tands?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sri H. V. Pataskar, who was deputed by the Central Government to bring about a settlement of the Andhra-Madras border dispute, visited Madras in December 1956 when a memorandum was presented to him on behalf of this Government. Sri Pataskar indicated that he would be meeting the

[3rd May 1957

Ministers of the Government of Andhra Pradesh and proceed further. However, as the general elections intervened, no progress could be made in this regard. This Government are in correspondence with the Government of India in the matter.

Sri K. VINAYAKAM: உயர் திருவாளர் படாஸ்கர் அவர்களை, மத்யஸ்தராக நியமிக்கும்போது அவர்கள் மத்திய அரசாங்கத்தின் அமைச்சாராக இருந்தார்கள். இப்பொழுது துர்பாக்கியவசமாக அவர் அந்தப் பதவியை இழந்ததால் அவர்களது மத்தியஸ்தம் பாதிக்கப்படுமா ? அவர் அப்படி ஏதாவது மத்தியஸ்தம் சொன்னால் அதை ஆந்திர சர்க்கார் ஏற்றுக்கொள்கிற அளவிற்கு இப்பொழுது இருக்கிறார்களா ? அண்மையில் சஞ்சீவி ரெட்டியார் அவர்கள் அந்த மத்தியஸ்தத்தை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது ; ஒரு இஞ்ச் கூட சித்தூர் ஜில்லாவிலிருந்து கொடுக்க முடியாது என்று சொன்னது நமது நிதியமைச்சருக்குத் தெரியுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM: சஞ்சீவி ரெட்டியார் அவர்கள் ஏதோ சொன்னதாகப் பத்திரிகைகளில் வந்திருந்தது. அது எவ்வளவு தூரம் சரியான தகவல் என்று எனக்குத் தெரியாது. ஆனால் இன்னொன்று. அதாவது படாஸ்கர் அவர்கள் இப்பொழுது இருக்கக்கூடிய நிலையில் மத்தியஸ்தம் செய்ய முடியுமா அதை ஆந்திர சர்க்கார் ஏற்றுக் கொள்வார்களா என்ற விஷயம் பற்றி இப்பொழுது மத்திய சர்க்காருடன் காஸ்பாண்டன்ஸ் நடந்து வருகிறது.

Sri A. GOVINDASAMY NAYAGAR: படாஸ்கர் அவர்களிடம் நமது சர்க்கார் சார்பில் ஒரு மகஜர் சமர்பித்ததாக நிதியமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்த மகஜரின் நகல் இருந்தால் அதன் முக்கிய அம்சங்களை இப்பொழுது தெரிவிக்க முடியுமா ? இப்பொழுது தயாராகவில்லை என்றால் ஒரு நகல் கொடுப்பார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM: நமது மெமராண்டத்தை யாரிடமும் காண்பிக்கக் கூடாதென்றும், ஆந்திரா சர்க்காரிடமிருந்து அவர்களுடையதை வாங்கின பிற்பாடுதான் இதை வெளியிடவேண்டுமென்றும் சொல்லியிருக்கிறோம். ஆதலால் அதை இப்பொழுது வெளியிடுவது உசிதமல்ல.

Sri P. M. MUNISAMI GOUNDER: இந்த எல்லைத் தகராறு சீக்கிரம் முடியாமல் இருப்பதன் காரணமாக எல்லைப் பகுதிகளிலிருக்கும் பொதுமக்களுக்கு மிக கஷ்டத்தை விளைவித்திருப்பதால் இதை சீக்கிரமாக முடிப்பதற்கு நமது சர்க்கார் இதில் மேற்கொண்டு சீக்கிரமாக நடவடிக்கைகள் எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM: என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பது பற்றி கனம் அங்கத்தினருக்கும் எல்லோருக்கும் தெரியும். ஆனால் இதைச் சீக்கிரம் முடிக்கவேண்டுமென்று பிடிக்கப் பிடிக்க அது நழுவிக் கொண்டே போய்கொண்டிருக்கிறது.

Sri N. K. PALANISAMI: எல்லைப் பிரச்னையைத் தீர்க்கும்போது, ஹோஸூர், பொன்னேரி போன்ற பிரதேசங்களில் தெலுங்கர்கள் அதிகமாக இருப்பதால் அதைச் சேர்த்தால்தான் நிர்வகிக்க முடியுமென்று ஆந்திர மந்திரிகள் சொன்னார்கள். ஆகவே, மகஜர் கொடுக்கும்பொழுது நமது சர்க்காரின் சார்பாக இந்த ஹோஸூர், பொன்னேரி போன்ற பிரதேசங்களை எடுக்கலாமா எடுக்கக் கூடாதா என்பது பற்றி என்ன அபிப்பிராயம் கொடுத்தார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM: என்ன அபிப்பிராயம் சொல்லியிருக்கிறோம் என்பதை இப்பொழுது வெளியிடுவது உசிதமல்ல என்று முன்பே குறிப்பிட்டேன். சர்க்காரின் அபிப்பிராயத்தை திட்டவட்டமாக முன்பே எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

3rd May 1957]

Sri K. VINAYAKAM : உயர் திருவாளர் படாஸ்கர் அவர்கள் கடந்த எட்டு மாதத்திற்கு முன்பு சென்னைக்கு வந்திருந்தார். பிறகு தேர்தல் குறுக்கிட்டது. தேர்தலில் ஈடுபட்டதால் வேலையை கவனிக்கமுடியாமல் இருந்திருக்கலாம். தேர்தல் முடிந்தபிறகு இன்னும் அவர்கள் ஹைதராபாத்திற்குப் போகாததற்குக் காரணம் என்னவென்று நமது அமைச்சருக்குத் தெரியுமா ? அப்படி ஏதாவது இருந்தால் நம்முடைய அரசாங்கம் மத்ய அரசாங்கத்திற்கு கடிதம் எழுதி படாஸ்கர் அவர்களை துரிதமாகப் போய் இந்த வேலையை முடிக்கும்படி தூண்ட முடியுமா ? அப்படி செய்யாததினால்தான் இந்தப் பிரச்னை நழுவிக்கொண்டே போய்கொண்டிருக்கிறது. ஆகவே . . .

Mr SPEAKER : I am afraid the hon. Member is giving an argument in support of a question which is not correct. I would request him to put the question and wait for an answer.

Sri K. VINAYAKAM : அப்படித் துரிதமாக நடத்த முடியாததால்தான் ஆந்திர சர்க்கார் இந்தப் பிரச்னையில் தாமதம் காட்டுகிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இதுபற்றி மத்ய அரசாங்கத்திற்கு கடிதம் எழுதியிருப்பதாக முன்பே குறிப்பிட்டிருக்கிறேன். மத்ய அரசாங்கத்தினிடமிருந்து பதில் வந்தவுடன் கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு எல்லாம் ஒரு சமயம் பதில் சொல்ல முடியும்.

* **Sri K. ANBAZHAGAN :** தலைவர் அவர்களே ! தமிழ் மக்களுக்குப் பெரும் தலைவலியாய் இருக்கிற இந்த எல்லைப் பிரச்னையைக் குறித்து எவ்வளவு காலத்திற்குள்ளாக நல்ல முடிவை இந்த அரசாங்கம் தேடித் தரும் என்று உறுதிமொழி கூறமுடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM : இது, நாம் மட்டும் செய்யக் கூடிய முடிவாய் இருந்தால் ஒரு தவணைகூற முடியும். நாளையே தீர்த்து விடுகிறேன் என்று கூறுவேன். வேறு ஒரு அரசாங்கம் சம்பந்தப்பட்டிருப்பதால் தவணைகூற முடியாமல் இருக்கிறது.

Sri M. KALYANASUNDARAM : நமது சர்க்கார் சம்பந்தப்பட்ட மட்டில் கருத்துகளை விளக்கி விட்டார்கள். ஆனால் இந்த சமரசத்தில் இரண்டு கட்சிகள் இருக்கின்றன. ஆந்திர சர்க்கார் சம்பந்தப்பட்ட மட்டில் இந்த சமரசத்தை நீடிப்பதாகக் கருதுகிறோம். மத்தியஸ்தத்திற்கு உட்படமாட்டோம் என்று நினைக்கிறார்கள். இரண்டாவதாக, புது மத்தியஸ்தரை நியமிக்கும்போது, பழைய மத்தியஸ்தர் எந்தவிடத்தில் விட்டுப் போனாரோ அங்கிருந்து தொடங்குவாரா அல்லது ஆரம்பத்திலிருந்து புதிதாக ஆரம்பிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM : என்னுடைய கருத்து, ஆந்திர மந்திரிகள் அவர்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவார்கள் 11-40 a.m.
என்பதுதான். ஆகவே இந்த மத்தியஸ்தத்திற்கு அவர்கள் உடன்படுவார்களா என்று சந்தேகிப்பது அவ்வளவு நல்லதல்ல, என்பதுதான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். புதிதாக யாரையாவது நியமித்தால் எங்கிருந்து ஆரம்பிப்பார்கள் என்று சொல்வதற்குள்ள தகுதி எனக்கு இல்லையென நினைக்கிறேன்.

Sri T. S. RAMASWAMI PILLAI : ஸார், இந்த எல்லைப் பிரச்னையில் நாம் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டுமென்றும் இல்லையென்றால் சமீபத்தில் செங்கோட்டை தாலூகாவில் ஒரு பகுதியையும் தேவிகுளம், பீர்மேடு பகுதிகளையும் கோட்டைவிட்டதுபோல் இவ்விஷயத்திலும் தமிழ் பகுதிகளை இழந்துவிடுவோம். அப்படி இழக்காகமவ்இருப்பதற்காக அரசாங்கம் வேண்டிய நடவடிக்கை எடுக்குமா ?

[3rd May 1957

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்போது கனம் அங்கத்தினர் அவர்கள் இந்தச் சபையில் இருப்பதால் இனிமேல் அவ்விதம் கோட்டை விடாமல் பார்த்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

SRI K. VINAYAKAM : ஏதோ சென்னை அரசாங்கத்திற்கு தெலுங்கு பகுதிகளை ஆந்திராவுக்கு விடுவதற்கு மனமில்லை என்றும் அதனால்தான் காலதாமதம் ஏற்படுகிறது என்றும் சொல்லப்படுகிறது. ஆதலால் இந்த காலதாமதத்தை நீக்குவதற்கு நம்மிடமுள்ள தெலுங்கு பிரதேசங்களை விட்டுகொடுத்துவிடலாம் என்று சென்னை அரசாங்கம் வெளிப்படையாக ஒரு அறிக்கை விடுவதற்கு கனம் அமைச்சர் அவர்கள் தயாரா என்று கேட்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : தெலுங்கு பிரதேசம் எது, தமிழ் பிரதேசம் எது என்று நிர்ணயிப்பதுதான் தற்போதுள்ள சிக்கலான பிரச்னை. அது முடிந்து விட்டால் இந்த விவாதமே இருக்காது.

SRI A. GOVINDASAMY NAYAGAR : நமது நிதி மந்திரி அவர்கள் சொல்லுகிறார்கள், ஆந்திர சர்க்காரின் நல்லெண்ணத்தில் நாம் சந்தேகப்படக்கூடாது என்று. இவ்வளவு சிக்கல் நிறைந்த பிரச்னையை சுமுகமாகத் தீர்த்துவிடலாம் என்றும் சொல்லுகிறார்கள். அது உண்மையானால் நமது முதல் மந்திரி காமராஜ் அவர்களும் ஆந்திர முதல் மந்திரி அவர்களும் தங்களுக்குள் பேசி இதைச் சுமுகமாக தீர்க்க முடிவு செய்யலாம் அல்லவா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : தனிப்பட்ட முறையில் காமராஜ் அவர்களும் ஆந்திர முதல் மந்திரி சஞ்சீவி ரெட்டி அவர்களும் பேசித் தீர்க்கக் கூடிய விஷயமல்ல. இது பொதுமக்களுடைய பிரச்னையாக இருக்கிறது. இவ்விஷயத்தில் காமராஜ் அவர்களுக்கு எவ்வளவு அக்கறை இருக்க வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களோ அது மாதிரி அங்குள்ள மக்களும் ஆந்திர முதல் மந்திரி அவர்களிடம் சொல்லுகிறார்கள். ஆகையினால் இவ்விஷயம் மத்தியஸ்தத்திற்கு விடப்பட்டிருக்கிறது. அதல்லாமல் இரண்டு பேரும் தனிப்பட்ட முறையில் பேசி இதைத் தீர்க்க முடியாது.

SRI M. KALYANASUNDARAM : ஸார், வட எல்லை தீர்வுக்கு ஆந்திர சர்க்கார் சில குறிப்பிட்ட யோசனைகளை வைத்திருக்கிறார்கள். அதாவது கிராம அடிப்படையில் பிரதேசங்களை நிச்சயிக்கவேண்டும் என்று. இதே முறையில்தான் இப்போதும் பேச்சு நடந்து வருகிறதா அல்லது அதில் ஏதாவது மாறுதல் உண்டா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதே முறையில்தான் இப்போது வைத்திருக்கிறோம். மத்தியஸ்தர் இனிமேல் என்ன முடிவுக்கு வருகிறார் என்று சொல்ல முடியாது.

SRI K. R. NALLASIVAM : இங்குள்ள சட்டசபை அங்கத்தினர்கள் ஒரு தூது கோஷ்டியாக சென்று ஆந்திர சட்டசபை அங்கத்தினர்களிடம் கலந்து பேசி ஒரு முடிவு எடுக்க சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுக்க சாத்தியப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : நல்லசிவம் அவர்கள் போவதற்குத் தயாராக இருந்தால் . . .

SRI K. KAMARAJ : நல்லசிவம் அவர்களையே தலைவராக வைத்து இந்த தூதுகோஷ்டியை அனுப்பலாம். (சிரிப்பு.)

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : இப்போது பார்க்கப்போனால் தமிழ் மக்கள் எல்லோரும் இதில் மிகுந்த அக்கறையோடு கவனித்து வருகிறார்கள். ஆதலால் இதைச் சீக்கிரம் தீர்ப்பதற்கு மத்திய சர்க்காருக்கு இங்கிருந்து ஏதாவது கடிதம் எழுதி உடனடியாக இதற்கு ஒரு பதில் வரவழைக்க முடியுமா ?

3rd May 1957]

The Hon. Sri C. SUBRAMANIAM : கடிதம் எழுதி தீர்க்க முடியும் என்றால் இது எவ்வளவோ வருஷத்திற்கு முன்னால் தீர்ந்திருக்க வேண்டும். இதைப்பற்றி சமீபத்தில்தான் எழுதியிருக்கிறோம். அதற்குள்ள பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

Sri M. JAGANNATHAN: ஸார், இந்தப் பிரச்னையை மத்தியஸ்த்திற்கு விட்டிருப்பதினால் எவ்வளவோ காலதாமதம் ஆகிறது. இதனால் ஜனங்களுக்குப் பலவிதமான கஷ்ட நஷ்டங்களும் ஏற்படுகிறது. ஆகவே இதை தீர்ப்பதற்கு எந்தெந்த பிரதேசங்களில் எல்லைப் பிரச்சினைகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் பொது ஜன வாக்கெடுப்பு **(plebiscite)** முறையை நடத்த சர்க்கார் முன்வருமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லக்கூடிய முறை அதிகமான குழப்பத்தையே ஏற்படுத்தும் என்று நினைக்கிறேன்.

Sri D. S. ATHIMOOLAM : கனம் ஐயா, ஆந்திர சர்க்காரும் சென்னை சர்க்காரும் இவ்வளவு காலமும் இந்தப் பிரச்னையை தீர்க்காமல் இருப்பது தமிழ் மக்களுக்கு பெரும் கவலையை உண்டாக்கியிருக்கிறது என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் அவர்கள் தெரிவித்தால் நல்லது.

Wage Board for Textile Industry.

Mr. SPEAKER : Mr. Kalyanasundaram will put question No. 3.

Sri K. VINAYAKAM : Sir, . . .

Mr. SPEAKER : I have already called Mr. Kalyanasundaram to put question No. 3.

Sri K. VINAYAKAM : Sir, even before the next question was called . . .

Mr. SPEAKER : Mr. Kalyanasundaram will put the question standing in his name.

* 3 *Q*.—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have made any proposal regarding the constitution of a Wage Board for textile industry; and

(*b*) whether the Central Government have constituted the Board in consultation with the State Government?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) & (*b*) The Government of India have constituted a Central Wage Board for the cotton textile industry in consultation with this Government.

Sri M. KALYANASUNDARAM : அந்த போர்டில் யார் யார் அங்கத்தினர்களாய் இருக்க வேண்டும் என்பதையும் மாகாண சர்க்கார் நிர்ணயித்திருக்கிறதா ?

The Hon. Sri R. VENKATARAMAN: இந்த போர்டில் மூன்று தரப்பிலுள்ள பிரதிநிதிகளும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இண்டிபெண்டன்ட் பிரதிநிதிகளும் முதலாளிகள் பிரதிநிதிகளும் தொழிலாளர்கள் பிரதிநிதிகளும் இருக்கிறார்கள். முதலாளிகள் பிரதிநிதிகளையும் தொழிலாளிகள்